

# நொதித்த ஆமணக்கு கரைசல்

ஸ்ரீ G.R.சக்திவேல்
த/பெ. K.ராமசாமி கவுண்டர்,
149, கணேசபுரம், கெட்டாவடி அஞ்சல், தாளவடி (வழி)
சத்தியமங்களம் (தாலுகா), ஈரோடு மாவட்டம் – 638461
(அலைபேசி : 09486316041)

**கண்டுபிடிப்பின் விளக்கம்**

5 கிலோ ஆமணக்கு விதைகளை நன்கு அரைத்து கொள்ள வேண்டும். இதனுடன் 5 லிட்டர் நீருடன் கலந்து எந்த வித இடையூறுமின்றி 10 நாட்கள் நொதிக்க வைக்க வேண்டும். அதே சமயத்தில் 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 மண்பானைகளை 1 ஏக்கர் நிலத்தில் வைக்க வேண்டும். ஒவ்வொரு மண் பானையிலும் 2 லிட்டர் நொதித்த கரைசலை சேர்க்க வேண்டும் அதனுடன் மீதி பகுதிக்கு நீர் சேர்க்க வேண்டும். இந்த துர்நாற்றம் பூச்சிகளை கவரும்.

**கண்டுபிடிப்பின் நடைமுறை பயன்பாடு**

இந்த கரைசலை மரத்தின் அருகில் புதைப்பதால் இந்த துர்நாற்றத்திற்கு பூச்சி அதை நோக்கி வந்து மண்பானைக்குள் விழுந்து இறந்து விடும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மண்பானைக்குள் இறந்த பூச்சிகளை எடுத்துவிட வேண்டும் பிறகு இந்தக் கரைசலை மீண்டும் உபயோகிக்க வேண்டும், பூச்சிகளின் எண்ணிக்கை குறையும் வரை உபயோகிக்கலாம். இந்த கரைசலை 3 மாதங்கள் வரை சேமித்து வைக்கலாம்.

இந்த நொதித்த ஆமணக்க கரைசல் பூச்சிகளை கட்டுப்படுத்தும் குறிப்பாக சாம்பல் நிற வண்டு, கூன் வண்டு, காண்டாமிருக வண்டு இவற்றை கட்டுப்படுத்தும். இது மேலும் எலிகள் போன்றவற்றை நிலத்திற்குள் வரவிடாமல் தடுக்கும். இயற்கை சூழலுக்கு ஏற்றபடி இந்த கரைசல் கரும்பு, பருத்தி, நிலக்கடலை பயிர்களில் சாம்பல் நிற வண்டை குறைந்த செலவில் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பமாகும்.இந்த முறையில் பயிரை பாதுகாக்கும் செலவில் 20% அளவு குறைகிறது, முழு செயல்பாட்டிற்கும் ஆகும் செலவு ரூ.250/- மட்டுமே செலவாகிறது.

**ஆதாரம்:**

பேராசிரியர்மற்றும்தலைவர்

MYRADA வேளாண் அறிவியல் நிலையம்,

272, பெருமாள்நகர், புதுவள்ளியம்பாளையம்,

கோபிசெட்டிப்பாளையம், ஈரோடுமாவட்டம்.

தொலைபேசி எண்: 04285 -241626, 241727